# 20.06.2026 செய்திகள்

## தமிழ்த்தாய் வாழ்த்து

- அண்ணா முதல்வராக இருந்த வரை, "வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித்திருநாடு..... வந்தே மாதரம் ...... வந்தே மாதரம்...." என்கிற மகாகவி பாரதியாரின் பாடல்தான் அரசு நிகழ்ச்சிகளில் தேசிய கீதத்துக்கு முன்பாக இசைக்கப்பட்டு வந்தது.
- அண்ணாவின் மறைவைத் தொடர்ந்து முதல்வரான கருணாநிதி, தமிழ்த்தாய் வாழ்த்தில் "திராவிடம்" வர வேண்டும் என்பதற்காக மனோன்மணீயம் சுந்தரனாரின் "நீராருங் கடலுடுத்த" பாடலிலில் சில திருத்தங்களைச் செய்து தமிழ்த்தாய் வாழ்த்தாக அறிவித்தார்.
- 1970 நவம்பர் 23-ஆம் தேதி அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டது. 2021 டிசம்பர் 17-இல் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆட்சிக்கு வந்த திமுக ஆட்சியில்தான் அதிகாரப்பூர்வமாக 'நீராருங் கடலுடுத்த' பாடல் தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்து என்கிற அங்கீகாரம் பெற்றது.
- எல்லா நாடுகளிலும் கூட்டங்கள் இறைவணக்கத்துடன் தொடங்கி, மாநில வாழ்த்தும் அதற்குப் பிறகு தேசிய கீதமும் இசைக்கப்பட்டு கலைவது என்பதுதான் வழக்கம். பிரிட்டனில் இரண்டு அவைகளும் சில நிமிஷங்கள் பிரார்த்தனைக்குப் பிறகுதான் அன்றாடம் கூடுகின்றன.
- அமெரிக்க நாடாளுமன்றத்திலும் இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது. இறைவணக்கம் வேண்டாம் என்று மதச்சார்பற்ற நாட்டில் தீர்மானிப்பதில் தவறில்லை.
- இந்திய நாடாளுமன்றத்தில் அன்றாடம் அவை கூடும் போது தேசிய கீதமான 'ஜன கண மன' வும் அவை கலையும் போது தேசியப் பாடலான 'வந்தே மாதரமும்' இசைக்கப்படுகின்றன. மாநிலங்களில் மாநில வாழ்த்தும், தேசிய கீதமும் இசைக்கப்படுகின்றன.

## விபி-ஜி ராம் ஜி திட்ட அமலாக்கம்

- விபி-ஜி ராம் ஜி எனப்படும் வளர்ந்த பாரதம் ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உறுதியளிப்புத் திட்டம் (125 நாள் வேலைத்திட்டம்) ஜுலை 1-ஆம் தேதி முதல் அமல்படுத்தப்பட உள்ளது.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு (100 நாள் வேலைத் திட்டம்) சட்டத்துக்கு மாற்றாக, விபி-ஜி ராம் ஜி (125 நாள் வேலைத் திட்டம்) மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

- புதிய சட்டத்தின்படி, 100 நாள் வேலைத் திட்டம் 125 நாள்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது; சட்டப் பேரவைகள் உள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இந்தத் திட்டத்துக்கான நிதியில் மத்திய அரசு 60 சதவீதத்தையும், மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் 40 சதவீதத்தையும் ஏற்கும்.
- வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் இமயமலைப் பகுதியில் உள்ள உத்தரகண்ட், ஹிமாசல பிரதேச மற்றும் ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் திட்டத்துக்கான நிதியில் மத்திய அரசு 90 சதவீதத்தையும், மாநில அரசுகள் 10 சதவீதத்தையும் ஏற்கும்.
- ஜூலை 1 முதல் அமல்படுத்தப்பட உள்ள விபி-ஜி ராம் ஜி திட்டத்தின்கீழ், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு இடைக்கால நிதியாக ரூ.95,692 கோடியை மத்திய அரசு, சில தினங்களுக்கு முன் விடுவித்தது. இந்தத் திட்டத்தின் கீழ், தமிழகத்துக்கு ரூ.7,957.57 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- விபி-ஜி ராம் ஜி சட்டத்தின் முதன்மை அம்சங்கள், அமலாக்கக் கட்டமைப்பு, அமைப்பு ரீதியிலான ஏற்பாடுகள், தொழில்நுட்ப அடிப்படையிலான நிர்வாக அமைப்பு முறை, மாநில அரசுகள் - மாவட்ட நிர்வாகங்களுக்கான ஆதரவு வழிமுறைகள் உள்ளிட்டவை குறித்து இந்த அதிகாரிகளுக்கு அறிமுக பயிற்சி வழங்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## "பி.எம்., ஸ்ரீ" திட்ட நிதி பயன்பாட்டில் முதலிடம் பிடித்தது ஆந்திரா

- அரசு பள்ளிகளை நவீனமயமாக்குவதை நோக்கமாக கொண்ட மத்திய அரசின், 'பி.எம்., ஸ்ரீ' திட்டத்தின் நிதி பயன்பாட்டில், நாட்டிலேயே ஆந்திரா முதலிடம் பிடித்துள்ளது என அம்மாநில அமைச்சர் நாரா லோகேஷ் தெரிவித்துள்ளார்.
- தேசிய கல்விக் கொள்கை 2020-ன் தொடர்ச்சியாக 'பிரைம் மினிஸ்டர்ஸ் ஸ்கூல்ஸ் ஆப் ரைசிங் இந்தியா' எனப்படும் பி.எம்., ஸ்ரீ திட்டத்தை மத்திய அரசு 2022ல் அறிமுகம் செய்தது.
- இந்த திட்டத்தின் வாயிலாக, 14,500 அரசு பள்ளிகளை இணைத்து, அவற்றை பிரதமரின் முன்மாதிரி பள்ளிகள் என்ற பெயரில் மேம்படுத்தி பிற பள்ளிகளுக்கு வழிகாட்டியாக்க வேண்டும் என்பதே, மத்திய கல்வி அமைச்சகத்தி ன் நோக்கம்.
- மொத்தம், 18 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் இந்த திட்டத்தில், பல்வேறு மாநில அரசுகள் பங்கேற்றுள்ளன. அவர்களுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்கி வருகிறது.

WHY SURESH....

- Comprehensive Coverage
- Structured Study Materials
- Expert Faculty & Mentorship
- 24/7 Doubt - Clearing Support
- Rigorous Testing & Analysis
- Offline Class / Online Class



| TUTICORIN | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI | COVAI | TENKASI | SALEM |
|---|---|---|---|---|---|---|---|
| 99445 11344 | 98942 41422 | 75503 52916 | 98431 10566 | 97555 52003 | 90433 10773 | 98840 51717 | 95147 89102 |